Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**FA7A** **7160–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

# BANKING LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Banker is a Privileged Debtor" – Explain with the general relationship between the Banker and Customer.

   "வங்கியர் ஒரு சலுகை பெற்ற கடனாளியாவர்" – வங்கியர் மற்றும் வாடிக்கையாளருக்கும் உள்ள பொது உறவுமுறை கொண்டு விளக்குக.

2. Analyse the Statutory Protection granted to the Paying and Collecting Bankers.

   செலுத்தும் மற்றும் வசூலிக்கும் வங்கியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ பாதுகாப்பை ஆராய்க.

3. Who are the parties to the Negotiable instrument? Enumerate the rights and privileges of Holder in due course.

   மாற்றுமுறையாவணத்தின் தரப்பினர்கள் எவராவர்? உரிய முறையில் கொண்டிருப்பவரின் உரிமைகளையும் சலுகைகளையும் விவரி.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Who may cross the cheque? Explain the kinds of crossing of cheques.

   எவர் காசோலையில் குறுக்குக் கோடிடலாம்? காசோலை குறுக்குக் கோடிடலின் வகைகளை விளக்குக.

5. Put forward the guidelines of the Reserve Bank on Licensing of Banking companies.

வங்கி நிறுவனங்களின் உரிமம் பெறுதல் குறித்த ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களை முன்னிடுக.

6. Portray the evolution of Banking in India.

இந்தியாவில் வங்கியியலின் வளர்ச்சி பற்றி விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Cash Reserve Ratio
பண இருப்பு விகிதம்

(b) Co-operative Banks
கூட்டுறவு வங்கிகள்

(c) Fixed Deposit Account
நிலை வைப்பீடு கணக்கு

(d) Bill of Exchange
மாற்றுச்சீட்டு

(e) Noting and protest
மறுப்புக் குறிப்பு மற்றும் மறுப்புரை

(f) Fraud by Bank Employees
வங்கி ஊழியர்களின் மோசடி

(g) Countermanding of cheques
காசோலையை இரத்து செய்தல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. On asking the banker about reason for dishonour of cheques over the phone, Mr. 'A' handed over the phone to Mrs. A. The banker disclosed about the gambling habit of Mr. A to Mrs. A. Analyse about Banker's duty to maintain secrecy. Who will be liable?

கைபேசியில் காசோலை மதிப்பளித்தல் மறுக்கப்பட்டதற்கான காரணத்தை வங்கியிடம் கேட்டபோது, கைபேசியை திருமதி. 'அ'–விடம் திரு. 'அ' அளித்தார். அப்பொழுது திரு. 'அ'–வின் சூதாட்ட பழக்கத்தை வங்கியர் திருமதி. 'அ'விடம் தெரிவித்தார். இரகசியம் காக்கும் வங்கியரின் கடமையை ஆராய்க. எவர் கடப்பாடு உடையவராவார்?

9. A negotiable instrument was with the endorsement "Pay C for my use". Examine the type of endorsement with appropriate provisions.

ஒரு மாற்றுமுறை ஆவணத்தில் "என்னுடைய பயன்பாட்டிற்காக இ–யிடம் செலுத்துக" என்ற மேலெழுத்து அமைந்திருந்தது. இதில் மேலெழுத்தின் வகையை சட்டவிதிமுறைகளுடன் ஆராய்க.

10. Mrs. Rose has forgotten about two 500 Rs. notes in her pocket in garment while washing and subsequently restored the identity of notes and presented to Banker. Is Rupee note valid?

திருமதி. ரோஸ் என்பவர் துணி துவைக்கும் போது சட்டைப்பையிலிருந்த இரண்டு 500 ரூபாய் நோட்டுகளை மறந்தார். ஆனால் ரூபாய் நோட்டுகளின் அடையாளத்தை மீட்டெடுத்து வங்கியிடம் அளித்தார். ரூபாய் நோட்டு செல்லுபடியாகுமா?

---

Register No. | | | | | | | | |

**FA7B** **7161–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

LABOUR LAW – II

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the employer's liability to pay compensation and its conditions under the Employee's Compensation Act, 1923.

   1923-ம் ஆண்டு பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் பணியாண்மையர் ஒருவர் இழப்பீடு வழங்குவதற்கான பொறுப்பினையும் மற்றும் அதன் நிபந்தனைகளையும் விவாதிக்கவும்.

2. State the list of establishments exempted from the Employees' Provident Fund Act, 1952 and explain the rationale behind such exemption.

   1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சட்டத்தில் விலக்களிக்கப்பட்டுள்ள நிறுவனங்களை எடுத்துரைத்து, எந்த அடிப்படையில் அந்த விலக்களிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை விளக்குக.

3. Define factory and explain the safety measures recommended under the Factories Act, 1948.

   "தொழிற்சாலை" வரையறு. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்த விதிகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Bonus. Explain the calculation of Bonus as per full bench formula.

   மீதூதியம் வரையறு. முழு ஆய தீர்வையின் கீழ் மீதூதியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை விவரி.

5. "The Employees' State Insurance Act, 1948 is a social security legislation" – Explain.

"1948-ம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டம் ஒரு சமூகப் பாதுகாப்புச் சட்டம்" - விளக்குக.

6. Mention the definition of "Shops", "Establishment" and "Commercial Establishment" under the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் தொழிலகங்கள் சட்டத்தின் கீழ் கடைகள், தொழிலகங்கள் மற்றும் வணிக தொழிலகங்கள் பற்றிய வரையறைகளை குறிப்பிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Objectives of Social Security Laws
சமூகப் பாதுகாப்புச் சட்டங்களின் நோக்கங்கள்

(b) Benefits under the Maternity Benefit Act, 1961.
1961-ம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டம் வழங்கும் நலன்கள்

(c) Employee's Pension Scheme
தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

(d) Amount of Gratuity
பணிக்கொடை தொகை

(e) Employee's State Insurance Court
தொழிலாளர் அரசு காப்பீட்டு நீதிமன்றம்

(f) Hazardous Processes
அபாயகரமான செயல்பாடுகள்

(g) Employment of young persons in shops and establishments
கடைகள் மற்றும் தொழிலகங்களில் இளம் வயதினரை பணிக்கு அமர்த்துதல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Leela, a pregnant woman, working in a television channel absented herself for the delivery without giving any notice in writing to the employer. Hence the employer discharged her from service. Is the action of the employer correct?

ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த லீலா என்ற கர்ப்பிணி பெண் அவளது குழந்தையை பெற்றெடுப்பதற்காக முதலாளியிடம் எழுத்துப் பூர்வமான எவ்வித அறிவிப்பையும் கொடுக்காமல் தானாகவே வேலைக்கு வராமலிருந்து விட்டாள். எனவே முதலாளி அவளை பணியிலிருந்து விடுவிப்பு செய்கிறார். முதலாளியின் இந்த நடவடிக்கை சரிதானா?

9. Nandu is employed in a sugar factory and his monthly wages is Rs. 10,000/-. He met with an accident while working on a machine and lost both his legs on $12^{th}$ December 2024. He was born on January 1992. Determine the quantum of compensation payable to him. (Relevant factor for Age 32, 33 is 203.85 and 201.66).

நந்து என்பவர் ஒரு சர்க்கரை ஆலையில் பணிபுரிந்து வருகிறார். அவரது மாதச் சம்பளம் ரூ. 10,000/-. ஒரு இயந்திரத்தில் வேலை பார்த்து கொண்டிருந்த போது விபத்து ஒன்றில் சிக்கி 2024-ம் வருடம் டிசம்பர் மாதம் 12ம் தேதி அவருடைய இரண்டு கால்களையும் இழந்து விடுகிறார். அவர் ஜனவரி மாதம் 1992-ம் ஆண்டு பிறந்தவர். அவருடைய இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுக. (32, 33 வயதிற்குரிய தொடர்புடைய காரணிகள் முறையே 203.85 மற்றும் 201.66).

10. In a shop, Madhu is employed to work from 9 am to 9 pm in a day. Whether this is proper under the Tamil Nadu Shops and Establishments Act, 1947 and calculate the interval time which Madhu is eligible for?

மது என்ற தொழிலாளி கடை ஒன்றில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை பணிபுரிகிறார். 1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் தொழிலகங்கள் சட்டத்தின் கீழ் இது சரியா? மதுவிற்குரிய வழங்க வேண்டிய இடைவேளை நேரத்தையும் கணக்கிடுக.

---

Register No. | | | | | | | | |

**FA7C** 7162–26

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ENVIRONMENTAL LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Trace the evolution of Environmental jurisprudence through the decisions of Supreme Court.

   உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் மூலமாக சுற்றுச்சூழல் சட்டவியலின் ஆரம்பத்தை ஆராய்க.

2. Explain the powers and functions of National Green Tribunal.

   தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் அதிகாரம் மற்றும் செயல்திறன் குறித்து விவரிக்கவும்.

3. ‘Precautionary principle is an essential feature of sustainable development– Comment.

   “முன்னெச்சரிக்கை நடவடிக்கை கோட்பாடு நின்று நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியின் முக்கிய சாராம்சமாக விளங்குகின்றது”– கருத்துரை தருக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the importance of various international conventions for the protection of environment.

   சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க உள்ள பல்வேறு பன்னாட்டு உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை விளக்கவும்.

5. Enumerate the powers and functions of State Pollution Control Board.

மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்களை எடுத்துரைக்கவும்.

6. Explain the procedure to be adopted in constituting reserve forest and protected forest.

ஒதுக்கப்பட்ட காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகளை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Bio-Reserve.

பல்லுயிர் இருப்பு.

(b) Land Pollution.

நில மாசு.

(c) National Park.

தேசீய பூங்கா.

(d) Taj Mahal Case.

தாஜ் மஹால் வழக்கு.

(e) Public Participation.

பொது மக்கள் பங்கேற்பு.

(f) Water Cycle.

நீர் சுழற்சி.

(g) Endangered Species.

அழிந்து வரும் உயிரினங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Fishermen were imposed a ban to fish during breeding season. The fishermen filed a case on the ground that their fundamental right is threatened. Decide.

மீன் இனப்பெருக்க காலத்தில் மீனவர்கள் மீன் பிடிப்பது தடை செய்யப்பட்டது. இது தங்கள் அடிப்படை உரிமையை அச்சுறுத்துவதாக இருப்பதாக மீனவர்கள் வழக்கு தொடர்ந்தனர் – தீர்மானிக்கவும்.

9. The government permitted mining activities near coastal area. Activists filed a case contending that the mining activities are illegal - Decide.

அரசு, கடலோர பகுதியின் அருகாமையில் சுரங்கப் பணிகளுக்கு அனுமதி அளித்தது. அத்தகைய சுரங்கப் பணி ஏற்பாடானது சட்டத்திற்கு புறம்பானது என்று செயல்முனைவோர் வழக்கிட்டனர் – தீர்மானிக்கவும்.

10. A sugar factory let out trade effluents into river. As a result the river water became polluted and gravely affected its quality. The nearby residents filed a case to close the sugar factory - Decide.

சர்க்கரை ஆலை திடக்கழிவுகளை ஆற்றில் விட்டதால் ஆற்றின் நீர் மாசுபடுத்தப்பட்டு தூய தன்மையினை இழந்தது. அவ்வாற்றின் அருகாமை உறைவிடர் சர்க்கரை ஆலையை மூட வேண்டும் என்று வழக்கிட்டனர் – தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

# FA7D

**7163-26**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ADMINISTRATIVE LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The aim of doctrine of separation of powers is to guard against tyrannical and arbitrary exercise of power by state" – Discuss.

   "அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு அரசு தன் அதிகாரத்தைக் கொடுங்கோன்மையாகவும், விதிக் கட்டுப்பாடு இன்றியும் பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் நோக்கம் கொண்டுள்ளது" – விவாதிக்கவும்.

2. Explain with the help of decided cases, the judicial control of delegated legislation.

   ஒப்படைவு சட்டத்தின் மீதுள்ள நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியோடு விளக்குக.

3. The vital changes in the concept of "Locus Standi" is an impact of Judicial activism – Elucidate.

   நீதித்துறை செயல் முனைப்பின் தாக்கமே "வழக்காடும் உரிமை" கருத்தமைவு முக்கிய மாற்றமடைய வழிவகுத்தது – தெளிவுபடுத்துக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Distinguish between Judicial and Quasi-judicial functions.

   நீதித்துறை செயல்பாடுகள் மற்றும் நீதித்துறை போல்வு செயல்பாடுகளுக்கு உள்ள வேறுபாட்டை ஆராய்க.

5. Explain the necessity, scope and functions of the institution of "Lokpal" in India.

இந்தியாவில் "லோக்பால்" என்ற அமைப்பின் தேவை, நோக்கெல்லை மற்றும் செயல்பாடுகளை விளக்குக.

6. "Public Corporations are State within the meaning of Art. 12" – Comment.

"பொதுத்துறை நிறுவனங்கள் ஷரத்து 12-ன் கீழ் அரசாகும்" — எடுத்துரைக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Conseil - d - Etat
கன்சில் - டி - இடாட்

(b) Administrative directions
நிர்வாக உத்தரவுகள்

(c) Procedural ultra vires
நடைமுறை அதிகார வரம்பு மீறல்

(d) Speaking Orders
காரணம் விளம்பும் ஆணைகள்

(e) Laches
கால தாமதம்

(f) Franks Committee
ஃபிராங் குழு

(g) Rudul Shah vs. State of Bihar. (AIR 1983 SC 1086)
ரூதுல் ஷா எதிர் பீகார் மாநில அரசு. (AIR 1983 SC 1086)

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is the Executive Magistrate. He has got the authority to take disciplinary action against his subordinates. 'B' is the Junior Assistant working under him. He conducts an enquiry against him. When nobody comes forward to expose against B, 'A' himself stands up from his seat and gives evidence against him. Then he himself records the evidence. Advise B.

'A' ஒரு நிர்வாகத்துறை நடுவராவார். அவருக்கு கீழ் பணிபுரிபவர்கள் மீது ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் உள்ளது. 'B' அவர் கீழ் பணிபுரியும் இளநிலை உதவியாளர். 'B' மீது ஒழுங்கின்மை குறித்து 'A' விசாரனை நடத்துகிறார். 'B'க்கு எதிராக சாட்சியம் அளிக்க எவரும் முன்வராத பொழுது, 'A' அவரது இருக்கையிலிருந்து எழுந்து 'B'க்கு எதிராக சாட்சியம் அளிக்கிறார். பின்பு அதனை அவரே பதிவு செய்கிறார். இது குறித்து 'B'க்கு ஆலோசனை வழங்குக.

9. Santhosh was injured by the heap of sand and gravel, left on the road by the road contractor. Santhosh filed a suit for damages against the state. Decide, citing relevant cases.

சாலை போடுவதற்கு ஒப்பந்தக்காரரால் சாலையில் கொட்டப்பட்டிருந்த மணல் மற்றும் சரளைக்கல் குவியல் காரணமாக சந்தோஷ் என்பவர் காயம் அடைகிறார். இது தொடர்பாக அரசுக்கு எதிராக இழப்பீடு கோரி அவர் வழக்கு தாக்கல் செய்கிறார். தொடர்புடைய வழக்குகளைக் குறிப்பிட்டு தீர்மானிக்கவும்.

10. 'X' is an employee of the Government of Tamil Nadu. Disciplinary proceedings have been initiated against him. He requires the Service Register to prove his innocence, which is in the custody of the state. The state replies that since Service Register is relating to the affairs of the state, it cannot be disclosed. Decide.

'X' என்பவர் தமிழ்நாடு அரசின் ஊழியராவார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் தன்னை நிரபராதி என்பதை நிரூபிக்க, அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தனது பணிப் பதிவேட்டை கோருகிறார். பணிப் பதிவேடானது அரசு விவகாரங்கள் சம்பந்தப்பட்டதால் அதனை 'X'க்கு வழங்க இயலாது என்று அரசு மறுக்கிறது. தீர்மானிக்கவும்.

---